Panchayat Union Council, Pallipet

* 246 Q.—Thiru K. VINAYAKAM: Will the Hon. the **Minister for Local Administration be pleased to state whether the** Hon. Minister is aware of the fact that there is no Council meeting **hall in Panchayat Union Council Office at Pallipet (Chingleput** district)?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஆம்.

திரு. கே. விநாயகம்: இந்தப் பள்ளிப்பட்டு பஞ்சாயத்து யூனியன் பல நாட்களுக்கு முன்னரே ஏற்பாடு செய்து இருந்தும் கூட இதுவரை அவர்களுக்கு கிராண்ட் கொடுக்காமல் போனதினாலே அங்கே மீட்டிங் ஹால் கிடையாது. இனியாகிலும் அரசாங்கம் அவர்களுக்குக் கொடுக்கிற தொகையைத் தயவுசெய்து கொடுத்து அதைக் கட்டி முடிப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: பொருளாதார நிலை இடம் கொடுத்தால் அது நிச்சயம் கவனிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

2. கவன ஈர்ப்பு

கீழ் பவானித் திட்டப் பகுதியில் தண்ணீர் தண்டத் தீர்வை விதிப்பும், மேம்பாட்டு வரி வசூலிப்பும்.

Thiru P. G. KARUTHIRUMAN: Sir, I call the attention **of the Hon. Minister for Food to a matter of urgent public importance, namely, the collection of penalty for raising paddy crops and collection of betterment tax in Lower Bhavani Project area** of Gobichettipalayam taluk although in similar areas of Erode **and** Bhavani taluks the assessment of penal levy has been cancelled **and** collection of betterment tax has been postponed in view of bad **monsoon year.**

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: கோயம்புத்தூர் மாவட்டம், ஈரோடு, பவானி தாலுகாக்களைச் சேர்ந்த கீழ் பவானித் திட்டப்பகுதியிலுள்ள நிலங்களின் மீது தண்ணீர் தண்டத்தீர்வை விதிப்பதும், மேம்பாட்டு வரி வசூலிப்பதும் சட்டசபை உறுப்பினர்களில் சிலர் குறிப்பாக கேட்டுக்கொண்டதன் மேல் நிறுத்தப்பட்டுள்ளது. நெற்பயிர் விளைவிப்பதற்கான தண்டத் தீர்வையை நீக்குவது குறித்து அல்லது மேம்பாட்டு வரி வசூலை ஒத்திப்போடுவது குறித்து எந்த ஆணையும் பிறப்பிக்கப்படவில்லை. வருவாய்த்துறைப் பெருவாரியம் மூலமாக கோயம்புத்தூர் மாவட்டக் கலெக்டரின் அறிக்கை வரும் வரையிலும், அதன்மீது

1967 ஜுலை 10] *[திரு. கே. ஏ. மதியழகன்]*

ஆணைகள் பிறப்பிக்கப்படும் வரையிலும், மேற்சொன்ன வரிவசூலை நிறுத்தி வைக்கவே அரசு அனுமதி வழங்கியுள்ளது. நெல் விளைவிப்பதற்காக தண்டத்தீர்வை வசூலை நிறுத்தி வைக்குமாறு கோபிச்செட்டிப்பாளையம் தாலுகாவில் உள்ள உழவர் பெருங்குடி மக்களிடமிருந்து எந்த விதமான முறையீடும் கிடைக்கவில்லை. எனவே, கோபிச்செட்டிப்பாளையம் தாலுகாவில் தண்டத் தீர்வை வசூலை நிறுத்தி வைக்குமாறு ஆணை பிறப்பிக்கப்படவில்லை.

ஈரோடு, கரட்டாடிப்பாளையம் திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் அவர்கள் கேட்டுக்கொண்டதன்மேல் கோயம்புத்தூர் மாவட்டக் கலெக்டரிடம் இருந்து விரிவான அறிக்கை வரும் வரையிலும் அதன்மீது ஆணைகள் பிறப்பிக்கும் வரையிலும், கோபிச்செட்டிப்பாளையம் தாலுகாவில் மேம்பாட்டு வரி வசூலிக்கப்படவேண்டாமென்று மாவட்டக் கலெக்டருக்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டப் பேரவை 41-வது விதியின்படி எந்த உறுப்பினர், மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வந்தாலும், அவர் மட்டும் ஓரிரு வினாக்களைப் போடலாம். ஆகவே, எதிர்க்கட்சித் தலைவரை ஒரு கேள்வி கேட்க அனுமதிக்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபைத் தலைவர் அவர்களே, கோபி தாலூக்கா விவசாயிகளிடம் இருந்து மனுவோ, வேண்டுகோளோ வரவில்லை என்று சொல்கிறார்கள். பலவிதமான வேண்டுகோள் களும் விண்ணப்பங்களும் வந்து நானே சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அனுப்பியிருக்கிறேன். ஒரு சமயம் அவர்களுடைய கவனத்திற்கு அவை கொண்டுவரப்படவில்லையோ என்னவோ. திரு. இராமசாமி கவுண்டர் அவர்களும் இதுபற்றிக் கேட்டிருப் பதாகச் சொன்னார்கள். ஆகவே, அந்தப் பகுதி எம்.எல்.ஏ. இடம் இருந்து எந்த மனுவும், கோரிக்கையும் வரவில்லை என்பது சரியான சமாதானமல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தவறான குற்றச்சாட்டை கனம் உறுப்பினர் அவர்கள் சாட்டுகிறார்கள். திரு. இராமசாமி கவுண்டரிடம் இருந்து வந்த விண்ணப்பத்திற்கான தகவல்பற்றித் தான் நான் கொடுத்திருக்கிறேனே தவிர, கனம் உறுப்பினர் அவர் கள் அதைப்பற்றி எதுவும் அனுப்பவில்லை. தொகுதி மக்கள் தவறாக நினைத்துக் கொண்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிற எல்லா விண்ணப்பங்களும் பதிவு செய்யப் படுகின்றன. உடனே கவனிக்கப்படுகின்றன என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU C. GOVINDARAJAN : On a point of order, Sir, . . .

THIRU K. VINAYAKAM rose.

MR. SPEAKER : A point of order takes precedence.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, நான் சென்ற மாதம் 27-ஆம் தேதி ஒரு காலிங் அட்டென்ஷன் மோஷன் கொடுத்திருக்கிறேன். நான் கொடுத்து இன்று உள்ளிட்டு 14 நாட்கள் ஆகின்றன. அது நெய்வேலியில் போலீசார். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினரை அருள்கூர்ந்து உட்காரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் சட்டப்பேரவை அலுவலகத்தில் கொடுத்த வினாக்கள், கொடுத்த அறிவிப்புகள், கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், ஆகியவைபற்றி இந்தப் பேரவையில் கேள்வி எழுப்பக்கூடாது என்று திட்டவட்டமான விதிமுறைகள் இருக்கின்றன. அவற்றைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்பினால் தனியாக அலுவலகத்தில் வந்து கேட்கவேண்டும்.

திரு. சி. கோவிந்தராசன் எழுந்தார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராசன் தம் இடத்தில் உட்கார வேண்டும். பேரவையின் விலை மதிக்க முடியாத நேரத்தை வீணாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

THIRU K. VINAYAKAM : Mr. Speaker, Sir, with your permission I would like to raise a point relating to the Agenda Paper. I have taken the permission of the Hon. Leader of the House to raise this point. நம்முடைய உணவு அமைச்சர் அவர்களும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் டெல்லியில் இருந்து திரும்பி வந்தவுடன் பத்திரிகையில் கொடுத்திருக்கும் படியான அறிக்கையைப் பார்த்தேன். அரிசி விநியோகம்பற்றி மத்திய சர்க்கார் யோசனை சொன்னதாகவும், அவர்கள் இப்போது கொடுத்துக்கொண்டிருக்கிற அரிசியின் அளவு 50 சதவிகிதம் குறைக்கப்படும் என்று தெரிவித்ததாகவும் அறிகிறேன். அது உண்மைதானா? அதன் காரணமாக இன்றைக்கு சென்னையில் கொடுக்கப்படுகிற ரேஷன் அளவு பாதிக்கப்படுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவது, கஜேந்திர கட்கர் ரிப்போர்ட்டை எடுத்து பிரதமரும், உதவிப் பிரதமரும் பேசியதாகச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய சிப்பந்திகளுக்கான டியர்னஸ் அலவன்ஸ், சிடி காம்பென்சேடரி அலவன்ஸ் ஆகியவைபற்றியும் அவர்கள் சொன்னதாகச் சொன்ன விஷயத்தில் ஏதாவது நல்ல செய்தி இருந்தால் இங்கச் சபைக்கு எடுத்துச் சொல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பத்திரிகையில் வந்துள்ள விஷயத்தைப்பற்றி கனம் விநயகம் அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் பற்றாக்குறை மாநிலங்களுக்கு ஒதுக்கி வருகிற அரிசியின் அளவுதான் பாதியாகக் குறைக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அதன் காரணமாக நம் ஊரில் ரேஷனில் கொடுக்கப்படுகிற அரிசியின் அளவு

1967 ஜூலை 10] [திரு. கே. ஏ. மதியழகன்]

பாதியாகக் குறைந்துவிடுமோ என்கிற பீதிக்கு இடமில்லை. நிச்சயமாகக் குறையாது. டெல்லியில் நடந்த பேச்சு வார்த்தைகளின் விவரங்களைப்பற்றி சந்தர்ப்பம் வரும்போது முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்வார்கள்.

3. பேரவைத் தலைவரின் விளக்கம்.

(அ) அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் உறுப்பினர்கள் அமர்தல்.

MR. SPEAKER : I promised on 30th June 1967 that I would give my ruling on a matter relating to Rule 62 which lays down that ' Members shall sit in such order as the Speaker may fix '. The point raised by several hon. Members, including the hon. Member, Thiru Vinayakam and the hon. the Leader of the Opposition, in this House was that this rule was applicable only to the time when an hon. Member was addressing this House. I am unable to agree to this because Rule 64 requires that when hon. Members address this House, they shall keep standing. Therefore if Rule 62 which says ' Members shall sit ' is applicable to those addressing the House, it will mean that I will have to stretch the meaning of the world 'sit' to include the word 'standing' which the dictionary does not allow me to do. Therefore, I hold that Rule 62 is not applicable to the time when the hon. Members are addressing this House. The Hon. Chief Minister desired that this rule should be taken into considereation by the Rules Committee with a view to finding out whether this required amendment or alteration. I have to announce to the House that this is being done in the meeting of the Rules Committee on the 13th instant.

(இ) உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்வது குறித்த விதி முறைகள்.

MR. SPEAKER : I have also to announce to the House that I have framed a set of rules with regard to walk-outs which might take place in this House. These walk-outs have already taken place twice and may happen again in the near or distant future. This has happened in this House and many other Legislatures. Looking into the authorities, I find that on 2nd March 1965 the then Hon. Speaker held that only slogan-shouting was irregular but not walking out. I find also that on 1st April 1965 a similar ruling was given that a mere walking-out was not irregular or contrary to Parliamentary procedure. On 3rd March 1965 it was stated in so many words, that walking-out is recognised as a parliamentary procedure. "So, I withhold consent to it because we have recognised that walking out is a parliamentary form of protest." Also on 1st July 1967 the hon. Member, Thiru Vinayakam wanted walk-outs to be recorded in the summary of the official proceedings, or in other words he desired that the walk-outs should be given recognition. I have also had discussion on this matter with the Hon. Speakers of other State Assemblies and I find that they are